*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII(1)**
**December - 2022**

# சுந்தரர் வரலாறும் பக்திநெறியும்

சுதா, ச.
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: Sudha15mt09@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

நாடோடி வாழ்க்கையே வாழ்ந்து வந்தவன் பழங்கால மனிதன். அக்காலத்தில் தன் வழிநடைப் பயணத்தில் தனக்கு அச்சம் தரக்கூடிய, இயற்கை சக்திகளையும் விலங்குகளையும் ஆரம்பத்திலிருந்தே வழிபடத் தொடங்கினான். அவ்வாறே வழிபாடு என்ற ஒன்று அக்காலகட்டத்தில் தொடங்கி மனித உணர்வுகளில் கலந்திருக்க வேண்டும். இயற்கை சக்திகளைத் தெய்வமாகவும், விலங்கினங்களை இறை உருவங்களுக்கு வாகனமாகவும் அமைத்து இறை வழிபாடுகளை மனிதன் தொடங்கினான் என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பின்னர் வழிபாடு பல சமயங்களாகப் பிரிந்து சமயத்திற்கு ஒரு தெய்வம் என்று பக்தி தழைக்கத் தொடங்கியது. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் என சமயங்கள் பல தோன்றின. சைவத்திற்கு நாயன்மார்களும், வைணவத்திற்கு ஆழ்வார்களும் அரும்தொண்டாற்றினர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான சுந்தரரின் வரலாற்றைப் பெரிய புராணம் வழியும், சுந்தரரின் தேவாரம் வழி பக்தி நெறியையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிப்புச் சொற்கள் : பக்திநெறி. பெரியபுராணம், சுந்தரர் தேவாரம்**

## முன்னுரை

இறைவனிடம் அன்பு வழி ஒன்றியிருத்தலே பக்தி ஆகும். தன்னைத் தடுத்தாட் கொண்ட இறைவனிடம் மிகுந்த அன்பு கொண்டு, பக்தி கொண்டு தோழமை நெறியில் இறைவனை அணுகியவர் சுந்தர மூர்த்தி நாயனார். நாயன்மார்களில் மிக முக்கியமான அடியவராகவும் போற்றப்படுகிறார். அத்தகைய சுந்தரரின் வரலாற்றையும் பக்தி நெறியையும் ஆராய்ந்து பார்க்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## பக்திக் காலம்

சங்ககாலம் தொட்டே இறை வழிபாடு தமிழகத்தில் இருந்து வந்துள்ளது.

ஐவகை நிலத்திற்கும் தெய்வங்கள் இருந்துள்ளதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியங்களிலும் புலவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடிய பின்னரே இலக்கியங்கள் இயற்றியுள்ளனர். தமிழக வரலாற்றைப் பொருத்தவரை பக்தி ஆழமாக வேரூன்றிய காலம் பல்லவர் காலம். தமிழகத்தில் களப்பிரர் காலத்தில் உள் நுழைந்த சமண, பௌத்த சமயங்களை வேரோடு சாய்க்க சைவ, வைணவ சமய அடியவர்கள் எழுச்சிபெற்ற காலமாகப் பல்லவர் காலம் திகழ்ந்தது. சைவ அடியவர்கள் நாயன்மார்கள் என்றும், வைணவ அடியவர்கள் ஆழ்வார்கள் என்றும் போற்றப்பட்டனர். இவர்கள் சமயங்களை வளர்த்ததோடு அதன் மூலம் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றினர். “இத்தாலி காதலின் மொழி என்று கூறுவது பொருந்தும் எனின் தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவதும் பொருந்தும் என்று தனிநாயக அடிகளார் தெளிவுபடுத்துகின்றார்”[1]. தமிழ் மொழியில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் போன்று வேறு எந்த மொழிகளிலும் பக்தி இலக்கியங்கள் தோன்றவில்லை.

**நாயன்மார்கள்**

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட அடியவர்கள் நாயன்மார்கள் எனப்பட்டனர். நாயன்மார்கள் மொத்தம் அறுபத்து மூவர் ஆவர். இவர்கள் பாடல்கள் இயற்றியும், சிவத் தொண்டுகள் பல ஆற்றியும் சமயத்தை வளர்த்தனர். நாயன்மார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள் ஆகும். நாயன்மார்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் சைவ சமயக் குரவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**சுந்தரர் பிறப்பு**

சுந்தரரின் இயற்பெயர் ‘ஆரூரார்’. இவர் சடையனார், இசைஞானியார் என்பவர்களுக்கு மகனாகத் திருநாவலூரில் பிறந்தார். இதனை,

**ஏதம்இல் கற்பின் வாழ்க்கை மனை**
**இசைஞானியார்பால்**
**தீதுஅகன்று உலகம் உய்யத் திருஅவதாரம்**
**செய்தார்”[2]**

**(பெரிய புராணம், திருமலைச் சுருக்கம்,**
**தடுத்தாட்கொண்ட புராணம் பா.3)**

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன. சுந்தரரின் குழந்தைப் பருவ அழகில் மயங்கிய நரசிங்க முனையர் என்ற குறுநில மன்னன் சுந்தரரைச் சடையனாரிடம் இருந்து தத்து எடுத்து வளர்தது வந்தார். சுந்தரர் மன்னர் மகனாக வளர்ந்தார். அரசிளங்குமரனாக அந்தணர் நெறியில் சுந்தரர் மிகச் சிறப்பாக வளர்ந்து வந்தார்.

**சுந்தரர் தேவாரம்**

பன்னிரு திருமுறைகளில் சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சுந்தரர் தேவாரம் ‘திருப்பாட்டு’ எனவும் அழைக்கப்படுகின்றது. ‘செந்துருத்திப் பண்’ கொண்டு பாடல் பாடியவர் என்ற பெருமையும் சுந்தரருக்கு உண்டு. சிவபெருமான் மீது சுந்தரர் பாடிய பாடல்கள் 38,000 ஆகும்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை என்னும் நூலில் அறுபது சிவனடியார்கள் குறித்தும் ஒன்பது

தொகை அடியவர்கள் குறித்தும் குறிப்புகள் உள்ளன. திருத்தொண்டத்தொகை நூலின் துணை கொண்டே சேக்கிழார் பெரியபுராணம் இயற்றினார். பெரிய புராணத்தின் காப்பியத் தலைவரும் சுந்தரர் ஆவார்.

**சுந்தரரின் சிறப்புப் பெயர்கள்**

சைவ சமயக் குரவர்களில் சுந்தரர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். சுந்தரர் யோக நெறியில் இறைவனை அடைந்தவர். இறைவனுடன் தோழமை பூண்டதால் 'தம்பிரான் தோழர்' எனவும் இறைவன் முதியவர் உருவில் வந்து தடுத்தாட் கொண்டதால் 'வன்தொண்டர்' எனவும் அழைக்கப்படுகின்றார். சேரமான் பெருமாள் நண்பர் என்பதால் 'தம்பிரான் தோழர்' எனவும் போற்றப்பட்டார். திருநாவலூரில் பிறந்ததால் 'திருநாவலூரார்' என்ற பெயரும் பெற்றார்.

**சுந்தரர் திருமணமும் தடுத்தாட் கொள்ளுதலும்**

சுந்தரர் திருமண வயதை எட்டியபோது சடையனார் சுந்தரருக்குத் திருமணம் செய்ய எண்ணினார். சடங்கவி சிவாச்சாரியார் என்பவரின் பெண்ணோடு சுந்தரருக்குத் திருநாவலூரில் திருமண ஏற்பாடு நடந்து வந்தது. இதனை அறிந்த சிவபெருமான் சுந்தரரின் முன்னோர் எழுதிக் கொடுத்த ஓலையுடன் முதியவர் உருவில் திருநாவலூர் வந்தடைந்தார்.

திருமண சபையில் இருந்தவர்களை அழைத்து என் மொழியைக் கேளுங்கள் என்றார். சுந்தரைப் பார்த்து உனக்கும் எனக்கும் வழக்கு ஒன்று உள்ளது என்று கூறினார். அதைத் தீர்த்த பின்னரே திருமணம் நடைபெற வேண்டும் என்று முதியவர் கூறினார். சுந்தரரும் முதியவரின் வழக்கைக் கேட்டறிந்தார். முதியவர், சபையோர்கள் முன்னிலையில் இந்நம்பியாரூரார் எனக்குப் பரம்பரை அடிமை; இதுவே என் வழக்கு என்று கூறினார். அதற்குச் சாட்சியாக சுந்தரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த ஓலையினையும் காட்டினார். சுந்தரர் அவ்வோலையைக் கிழித்து எறிந்தார்.

சுந்தரர், அந்தணர் வழக்கு திருவெண்ணெய்நல்லூர் வேதியர்கள் நிறைந்த சபைக்குச் சென்றது. சபையில் இருந்தோரை நோக்கி அந்தணர், சுந்தரர் கிழித்தது படி ஓலையே! என்னிடம் மூல ஓலையே உள்ளது என்று எடுத்துக்காட்டினார். தம் வழக்கையும் நிரூபித்துக் காட்டினார். ஓலையில் உள்ள கையெழுத்து சுந்தரரின் பாட்டனார் கையெழுத்து தான் என்பது உறுதியானது. சுந்தரர் அந்தணருக்கு அடிமை தான் என்று உறுதியாகி வழக்கு முடிவுக்கு வந்தது. இதனை,

> **"ஆதியின் மூல ஓலைகாட்டி நீ அடிமை ஆதல்**
> **சாதிப்பன் என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான்"**[3]

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றது.

முதியவர் உருவில் வந்த அந்தணரைச் சுந்தரர் பின் தொடர்ந்த போது அவர் கோயிலின் உள்ளே சென்று மறைந்தார். தன்னைத் தடுத்தாட் கொண்டவர் சிவபெருமான் என்று அறிந்து கொண்டார். சிவபெருமானை நோக்கிச் சுந்தரர் தனது முதல் தேவாரப் பாடலைப் பாடினார். இறைவனைப் 'பித்தா' என்று

அழைத்துத் தன்னை ஆட்கொண்டவனே என்று பாடினார். இதனை,

**"பித்தா பிறை சூடி பெருமானே! அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை"**

**(ஏழாம் திருமுறை, சுந்தரர் தேவாரம்.**
**திரு.வெண்.நல. பதி., பா – 1)**

என்ற பாடலடிகளின் வழி அறியலாம்.

## சுந்தரர் பாடல்களில் பக்தி நெறி

இறைவனிடத்தில் தீராத அன்புடையராக இருத்தல் வேண்டும் என்பது சுந்தரரின் பக்திநெறி ஆகும். அன்போடு இறைவனை வழிபட்டால் நமக்குத் துன்பங்களை நீக்குவதோடு, தோழனாக இருந்து பணிகளையும் செய்வான் என்று சுந்தரர் தம் தேவாரப் பாடல்கள் வழி குறிப்பிடுகின்றார். இறைவன் மீது கொண்ட பக்திநெறியின் காரணமாகத் தான் அடைந்த பல நன்மைகளைத் தாம் இயற்றிய தேவாரப் பாடல்கள் வழி எடுத்துக்காட்டியுள்ளார்.

## மூவேந்தருடன் இறைவனை வழிபடல்

சுந்தரர் சேர, சோழ, பாண்டியன் ஆகிய மூவேந்தர்களுடன் சேர்ந்து மதுரையில் பல சிவத்தலங்கள் சென்று பாடியருளினார். திருப்பரங்குன்றத்தில் சுந்தரர் மூவேந்தர்களுடன் வழிபட்டு, இறைவனைப் பழிப்பது போலப் புகழ்ந்து பதிகம் பாடினார். இதனை,.

**"முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே**
**மொழிந்தாறும் ஓர் நான்கும் ஓர்ஒன்றினையும்"**
**(ஏழாம் திருமுறை, சுந்தரர் தேவாரம்.**
**திருப்பரங்குன்றம். பதி., பா.2)**

என்ற அடிகளின் வழி சுந்தரர் மன்னர்களுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

## இறையருளால் பஞ்சம் நீங்குதல்

பாடுவோருக்கும் பணிந்து வழிபடுவோர்க்கும் இறைவன் வயிற்றுப் பசியையும் நீக்குவான் என்று திருக்கோளிலி பதிகத்தில் சுந்தரர் குறிப்பிடுகின்றார். குண்டையூர்க் கிழார் என்பவர் செந்நெல், பருப்பு, முதலிய பொருட்களை அடியவர்களுக்குக் கொடுத்தருளி வாழ்ந்து வந்தார். மழை பெய்யாது பஞ்சம் ஏற்பட்ட போது தன்னைத் தேடி வந்த சுந்தரருக்குப் பொருள் வழங்க இயலாது போனது. இதை எண்ணித் துயரில் ஆழ்ந்த குண்டையூர் கிழார் உணவு உண்ணாமல் துயில் கொண்டார். குண்டையூர் கிழாரின் ஏக்கத்தை உணர்ந்தார் சிவபெருமான். குண்டையூர் கிழார் இறையருளால் குவியல் குவியலாக நெல் கிடைத்தது. இதனை,

**கோதில் பொழில்புடைசூழ் குண்டை**
**யூர்ச் சில நெல்லுப் பெற்றேன்**
**ஆதியே அற்புதனே**
**அவை அட்டித் தரப்பணியே"**
**(சுந்தரர் தேவாரம், திருக்கோளிலிப்பதிகம் பா. 3)**

என்ற பாடலடிகளின் வழி சிவ அடியார்களுக்குத் தொண்டு செய்பவர்களின் குறைகளையும் தீர்த்து வைக்கும் சிறப்புடையவர் சிவபெருமான் என்பதனைச் சுந்தரர் தம் பதிகங்களில் எடுத்தியம்புகின்றார்.

## இறைவன் வழித் துணையாக வந்தது

சுந்தரர் திருப்புறம்பயத்திலிருந்து பல தலங்களை வணங்கிச் சென்று

கொண்டிருந்தார். திருக்கூடலையாற்றூர் என்னும் தலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது சுந்தரர் எதிரில் இறைவன் வேதியர் உருவம் கொண்டு வந்தார். அதைக் கண்ட சுந்தரர் வேதியரிடம் கூடலையாற்றூர் செல்ல வழி யாது? என வினவ, வேதியர் இவ்வழி செல்க என்று கூறிச் சிறிது தூரம் வழித் துணையாக வந்து பின் மறைந்தார். அப்பொழுது வேதியர் வடிவில் வந்தவர் பெருமானே என உணர்ந்து சுந்தரர் திருககூடலையாற்றூர்ப் பதிகம் பாடினார். இதனை,

**“கொடியணி நெடுமாடக் கூடலையாற்றூரில்**
**அடிகள் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே”**
**(சுந்தரர் தேவாரம், திருக்கூடலையாற்றூர் பதிகம், பா. 1)**

என்ற பாடல் அடிகளின் வழி அறியமுடிகின்றது.

### பொன்னை ஆற்றில் இடுதல்

திருமுதுகுன்றம் என்ற ஊர் தற்போது விருத்தாசலம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இத்தலத்தில் சுந்தரர், பொன்னை மணிமுத்தாறு ஆற்றில் இட்டார். அதன் பின் பரவையார் முன்னிலையில் திருக்குளத்தில் மீட்டெடுத்தார். இறையருளால் தாம் செய்த அற்புதங்களைத் தேவாரப் பதிகங்களில் பாடியருளியுள்ளார். இதனை,

**“முன்செய்த மூவெயிலும் எரித்தீர் முது குன்றமர்ந்தீர்**
**மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே**
**(சுந்தரர் தேவாரம், திருமுதுகுன்றம் பதிகம், பா. 1)**

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன. இறைவன் அருளால் செய்ய முடியாத செயல்களையும் அற்புதங்களாகச் சுந்தரர் செய்து காட்டியுள்ளார் என்பதனை அறியமுடிகின்றது.

### சுந்தரர் கைலாயம் அடைதல்

சுந்தரர் கைலாயம் புக பெருமானிடம் வேண்டினார். சுந்தரரின் விருப்பத்தை நிறைவேற்றச் சிவபெருமான் திருமால், பிரமன் முதலிய தேவர்களைத் திருவஞ்சைக்களம் அனுப்பினார். சிவபெருமான் சுந்தரரை வெள்ளையானையில் ஏற்றிக் கொணர்க என்று கட்டளையிட்டார். தேவர்கள் சுந்தரரை வெள்ளையானையில் ஏற்றிக் கைலாயம் புறப்பட்டனர். சுந்தரரின் தோழர் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை ஏறி முன் செல்ல, சுந்தரருடன் பிற தேவர்கள் பின் தொடர்ந்து கைலாயம் சென்றனர். இதனை,

**“விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்**
**என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே”**
**(சுந்தரர் தேவாரம் திருநொடித்தான்மலை பதிகம் பா. 5)**

இவ்வாறாகச் சுந்தரர் தம் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார். சுந்தரர் கைலாயம் செல்லும் காட்சி; தஞ்சைப் பெரிய கோயிலில் ஓவியமாக தீட்டப்பட்டிருந்தது. பிற்காலத்தில் அவ்வோவியங்களின் மேல் நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டன. இதனை அண்ணாமலை பல்கலைக்கழக ஆசிரியர் கோவிந்தசாமி கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தார்.

## தொகுப்புரை

சுந்தரர் தேவாரம், இறைவனிடத்தில் அன்பும், நம்பிக்கையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது.

சுந்தரர் பல சிவத் தலங்கள் சென்று வழிபாடு செய்துள்ளார். தாம் பெற்ற இறையருளை எண்ணி அத்தலங்கள் மீது பதிகங்கள் பாடியுள்ளார். இறைவன் பல நிலைகளிலும் தனக்கு உறுதுணையாக இருந்த அருளைத் தனது பதிகங்கள் வழி எடுத்துக்காட்டியுள்ளார்.

இறைவனை ஆழமாக மனத்துள் நினைத்தல் வேண்டும். அவ்வாறு நினைத்தால் இறைவன் ஏதேனும் ஓர் உருவத்தில் நமக்குத் துணை நிற்பான் என்பதனைச் சுந்தரர் தேவாரம் வழி அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. பெரிய புராணம் மூலமும் உரையும், தடுத்தாட்கொண்ட புராணம், ப. 36
2. பெரிய புராணம் மூலமும் உரையும், தடுத்தாட்கொண்ட புராணம், ப. 47
3. பாக்கியமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ப. 294